Registered as a Newspaper
பக்கங்கள் 16 | விலை ரூ. 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 10
புதன்கிழமை
06 டிசெம்பர் 2023
கார்த்திகை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"நாட்டில
இனப்பிரச்சினையை
ஒழிச்சாலும் உந்த
'கொலைசிப்பை' ஒழிக்க
ஏலாது கண்டியளோ"



# மாவீரரை ஒருபோதும் அஞ்சலிக்க விடோம்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தீர்க்கம்

**கொழும்பு, டிசெம்பர் 6**

**உறவுகளை நினைவுகூருகின்றோம் என்ற போர்வையில் மாவீரர்தின நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த அனுமதிக்கமுடியாது. அதனை நீங்களும் (சில தமிழ் எம்.பி.க்கள்) ஊக்குவிக்கவேண்டாம். அவ்வாறான நிகழ்வுகளை நடத்தினால் பொலிஸார் நிச்சயம் கைது செய்வார்கள். இதனைத் தடுக்கமுடியாது - இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

15

## இனவாதத்தைத் தூண்டும் அநாமதேய மின்னஞ்சலுக்கும் எமக்கும் தொடர்பேதுமில்லை!

### பொறியியல் பீடத்தின் சிங்கள மாணவர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களால் ஏ-9 வீதியை மறித்து எதிர்வரும் 7ஆம் 15

## புலமைப்பரிசில் பரீட்சையை கைவிடுவதற்கு வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 6
தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை கைவிடப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் நடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன 15

## பயங்கரவாதத் தடைச்சட்டம் கடுமையாக வேண்டுமாம்!

### பெரமுன எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 6
நவீன சவால்களை எதிர்கொள்வதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிடவும் கடுமையான சட்டங்கள் அவசியம் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான 15

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் இலங்கையில் முன்னேற்றம் வருமாம்

பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு இலங்கைத் தூதரகம் சப்பைக்கட்டு

விரிவு:- பக்.15

## பிறப்புவீதம் குறைகிறது

### கல்வியமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ. 6
இலங்கையில் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளதால் பாடசாலைகளுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சரிவடைந்துள்ளது என்று கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.
5 வயது பூர்த்தி 15



## நெடுந்தீவுக்கு ஹெலியில் பறந்தனர் சுற்றுலாப் பயணிகள்!

விரிவு:- பக்.15

### யாழ். பல்கலைக்கழகத்தின்

## கல்வியியற்றுறைக்கு தனிப்பீடம் வேண்டும்!

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறை, கல்வியியல் பீடமாக மாற்றப்படவேண்டும் என்று கல்வி அமைச்சரிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு 15







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் மக்களின் காணிகள் வவு.வில் அடாத்தாக ஆக்கிரமிப்பு

## அரசியல்வாதியொருவரின் ஆதரவாளர்கள் விஷமச்செயல்

**வவுனியா, டிசெ.6**

**புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுடைய காணிகள் அரசியல்வாதியொருவரின் ஆதரவாளர்களால் அபகரிக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

வவுனியா - ஓமந்தை மற்றும் பன்றிக்கெய்தகுளம் பகுதிகளில் இவ்வாறான செயற்பாடுகள் அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நீண்ட காலமாக குறித்த காணிகள் புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்களால் பராமரிக்கப்படாமலும் இலங்கையில் வாழும் அவர்களது உறவினர்களுக்கு அதனை கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்படாமையினாலும் காணப்பட்டமையே இவ்வாறு அரசியல் பின்புலம் கொண்டவர்கள் காணிகளை அடாத்தாகப் பிடித்து தமக்கு ஆதரவானவர்களுக்கு ஏதுவாக அமைந்துள்ளது என்று மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பில் அதிகாரிகள் உடன் நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-110-18)



## நாவலர் நினைவுதினம்

வவுனியா, டிச.6

ஆறுமுகநாவலரின் 144 ஆவது நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவுச் சிலைக்கு முன்பாக நகரசபைச் செயலாளர் பூ. செந்தில்நாதன் தலைமையில் இந்தநிகழ்வுஇடம்பெற்றது.

நினைவுரைகளை கா. அனிஸ் என்ற மாணவனும், தமிழருவி சிவகுமாரன்,தமிழ்மணி அகளங்கன் ஆகியோரும் நிகழ்த்தினர். (எ-110)

## ஏற்றுமதி சரிவு

கொழும்பு, டிசெ.6

2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபர் மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி 14.6 வீதத்தால் குறைந்துள்ளது. ஏற்றுமதி 898.0 மில்லியன் அமெரிக்க டொலரால் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

2023 செப்ரெம்பர் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட மதிப்புடன் ஒப்பிடும் போது இது 13.13 வீதம் குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆடை, ரப்பர், ரப்பர் சார்ந்த பொருள்கள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருள்களில் ஏற்றுமதி தேவை குறைவதால் சரக்கு ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது. (எ-இ)

## ரொஷான் மீது குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.6

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிராக இலங்கைக் கிரிக்கெட் சபை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

கிரிக்கெட்டுக்காக ஒதுக்கிய பணத்தை முன்னாள் அமைச்சர் வேறு விளையாட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-6)

## 40,000 வெற்றிடம்

கொழும்பு, டிசெ.6

நாடளாவிய ரீதியில் அரச பாடசாலைகளில் சுமார் 40 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழுவால் நீதித்துறை செயற்பாடுகளை தவறாகப் பயன்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அந்த வெற்றிடங்களை நிரப்புவதில் தடை ஏற்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அரச பாடசாலைகளின் கல்வித்தரம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## வரலாற்று நிகழ்வு

கொழும்பு, டிசெ.6

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் பல பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 200 மாற்றுத்திறனுடைய சிறுவர்கள் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றம் சென்றிருந்தனர்.

வரலாற்றில் முதன்முறையாக நடந்த தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும் என்பதை நினைவுபடுத்திய சபாநாயகர் இந்தச் சிறுவர்கள் உட்பட இலங்கையிலுள்ள அனைத்து மாற்றுத்திறன் சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை அனைத்து வகையிலும் வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துகளைத் தெரிவித்தார். (எ-இ)

## தாக்குதலுக்கு இலக்கான மின்சாரசபை ஊழியர்கள்

கொழும்பு, டிசெ.6

மின்சார இணைப்பைத் துண்டிக்கச் சென்ற மின்சார சபை ஊழியர்கள் இருவர் மீது கம்பஹாவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கான இரு ஊழியர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-இ)



## மீன்கள் வெளியேறாமல் தடுப்பதற்கு வலைகள்

முல்லைத்தீவு, டிசெ.6

வான்பாயும் போது குளத்திலிருந்து மீன்கள் வெளியேறாமல் தடுக்கும் வகையில் தடுப்பு வலைகள் அமைக்கும் பணிகள் புதுமுறிப்புக் குளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அதிகாரசபையின் பணிப்பாளர் குமாரகுலசிங்கம் சங்கீதன் மற்றும் குழுவினரும், புதுமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களும் இணைந்து இந்தப் பணிகளை முன்னெடுத்தனர். (எ-214)

## ரங்கன்குடியிருப்பை அழிக்கும் யானைகள்

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.6

கண்டாவளை, கல்மடுநகர் கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட ரங்கன்குடியிருப்பு மக்கள் காட்டு யானைகளால் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினமும் 3 காட்டு யானைகள் குடியிருப்புகளுக்குள் புகுந்து பயன்தரு மரங்களை அழித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். யானைகளைத் துரத்த முற்பட்ட இருவர் காயமடைந்துள்ளனர்.

அழிவுகள் தொடர்பாகத் தங்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படுவதில்லை என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பார்த்து வாழ்வாதார உதவிகளை வழங்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)



## கடுகதி ரயில் சேவையை மீள இயக்கக் கோரிக்கை

வவுனியா, டிசெ.6

வவுனியா ரயில் நிலையத்திலிருந்து அதிகாலை 5.45 மணிக்குப் புறப்பட்டு கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயில் சேவையை மீண்டும் இயக்கவேண்டும் என்று பயணிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த ரயில் மீண்டும் இயக்கப்பட்டால், முற்பகல் 11 மணியளவில் கொழும்பை அடையக்கூடியதாக இருக்கும். ஆதலால், பயணிகளின் நலன்கருதி இந்தத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பிய ரணில்

கொழும்பு, டிசெ.6
ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் பங்குபற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.
நேற்று முன்தினம் அவர் இரவு டுபாயில் இருந்து இலங்கை வந்தடைந்தார் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி காலநிலை நீதிமன்றத்துக்கான முன்மொழிவை முன்வைத்ததுடன், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக் கழகத்திட்த்தை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். (எ-இ)

# ஐ.எம்.எப். நிதி கிடைத்தாலும் மறுசீரமைப்பில் சிக்கல்வரும்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ.6**
**சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் கடன் தவணை கிடைக்கும் என நம்புகிறோம். ஆனால் கடன் மறுசீரமைப்பில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாட்டுக்கு கட்டமைப்பு ரீதியான பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை. கடன் மறுசீரமைப்பு இல்லாமல் நாடு முன்னேறமுடியாது. இந்தியா, சீனா தவிர்ந்த ஏனைய கடன் வழங்குநர்களுடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# ரிஷாட் கருத்துக்கு விஜயதாஸ எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.6
தனது அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணையில் இருந்து விலகிய முஸ்லிம் நீதியரசரை சபிக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளமை பாரதூரமானது. நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிபதிகளுக்கு எதிராக இவ்வாறு கருத்துரைக்கமுடியாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
நீதியரசர் முஸ்லிம்களுக்காக முன்னிலையாவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். நீதியரசர் நவாஸ் தொடர்பில் இவர் எமக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை என்றும் நீதியரசர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சட்டவாக்கத்துறையை சாடுகின்றார் ரொஷான்

சட்டவாக்கத்துறை கோழைத்தனமாகியுள்ளது. 225 உறுப்பினர்களில் 125 பேர் அடுத்த முறை வீட்டுக்குச் செல்வார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.
ஊழல் மோசடியற்றவர்களுக்கு அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களை வழங்க வேண்டும். இந்த அரசாங்கம் ஊழல் மோசடியை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்துள்ளது. ஊழல்வாதிகளுக்கும், அவர்களுக்குத்துணை செல்பவர்களுக்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# புதிய பதவியை உருவாக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ.6
பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவியொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.
இந்த விடயம் தற்போது கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது என்றும், அமைச்சரவைக்கு அறிவித்த பின்னர் எதிர்காலத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
பொலிஸ் ஆணையாளர் பதவி என்பது ஜனாதிபதியால் நிறுவப்படும் ஒரு சிவில் பதவியாகும்.
இந்தப் பதவிக்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

# மக்கள் மனநிலையில் மாற்றம் வேண்டுமாம்

## பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

**பொலிஸார் தொடர்பான பொதுமக்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் போக்குவரத்துப் பொலிஸார் தொடர்பில் கூடிய அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)**

# 50 ஆயிரம் பேரின் ஓய்வூதியம் நிறுத்தம்

கொழும்பு, டிசெ.6
கடந்த ஐந்து ஆண்டுகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் ஓய்வூதியம் பல்வேறு காரணங்களுக்காக நிறுத்தப்பட்டுள்ளது.
தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வினவப்பட்ட கேள்வியொன்றுக்கு ஓய்வூதியத் திணைக்களம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 53 ஆயிரத்து 813 பேரின் ஓய்வூதியத் தொகை ஓய்வூதியத் திணைக்களத்தால் நிறுத்தப்பட்டுள்ளது.
பெரும்பாலானோரின் ஓய்வூதியம் இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஷானியைக் கொல்லச் சதி

கொழும்பு, டிசெ.6
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் இயக்குநர் ஷானி அபயசேகரவைக் கொலை செய்வதற்கான சதித் திட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அரச புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத் துக்குத் தெரிவித்துள்ளனர்.
கார் விபத்தின் மூலம் ஷானி அபயசேகரவைக் கொலை செய்வதற்கான சதித் திட்டம் தொடர்பான விவரங்களை அரசபுலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர் என சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். (எ-இ)




# பு தினம் தெரியுமோ?

**தமிழரசுக் கட்சிக்குள்ள தலைவர் பதவிக்கு நடக்கிற குத்துவெட்டுகள் பற்றியும், செயலாளர் பதவிக்கு எப்பிடியெல்லாம் காய் நகர்த்துகினம் எண்டதையும் பட்சி நேற்றுச் சொன்னதெல்லோ. இண்டைக்கும் அது சம்பந்தமா ஒரு விசயம் சொல்லாட்டி பட்சிக்கு தலையே வெடிச்சுப் போடும்.**

**'தலைவர் பதவிக்கே தேர்தல் வைக்கிற அளவுக்கு உட்கட்சி ஜனநாயகம் பேணப்படுகுது' எண்டு அந்தக் கட்சிக்காரர்கள் உருண்டு பிரண்டு முட்டுக் குடுத்தாலும், இப்பிடியான தேர்தலை கனபேர் விரும்பேலை எண்டதுதான் உண்மை. இப்பிடி தலைவர் பதவிக்காக ரண்டு தரப்பா கன்னை பிரிஞ்சு நிக்கிறது நிரந்தரமாகிடுமோ எண்டும் பயப்பிடுகினம். தலைவர் தேர்தலில சிறீயர் வெண்டால் சுமந்திரன் தரப்பு அவைக்கு எதிராத்தான் பிறகு வேலை செய்யும். அதைமாதிரி சுமந்திரன் வெண்டால் சிறீயர் தரப்பும் அவைக்கு ஏட்டிக்குப் போட்டியாத்தான் நடக்கும். ஏற்கனவே தள்ளாடிக்கொண்டிருக்கிற கட்சிக்கு இப்பிடி உள்ளுக்க இருந்தே கன்னைக் குத்துற வேலையள் இன்னும் பாதகமாப் போடும். அதாலதான் எப்பிடியாவது போட்டியில்லாமல் ஏதோ ஒரு தரப்பை சமாதானப்படுத்தி, தேர்தலில இருந்து விலக வைக்கிற வேலை தொடங்கியிருக்கு. அதிலையும் ஒரு ஏரவஞ்சனை இருக்கத்தான் செய்யுது. கட்சியில பழம் திண்டு கொட்டை போட்ட ஆக்களுக்கு சுமந்திரனோட கதைக்கப் பயம் போல. அதால சிறீயரைத்தான் கதைச்சு விலத்தச் சொல்லிக் கேக்கினம் எண்டு கதை.**

**இப்பிடி பேசிப்பார்த்தும் பலனில்லாட்டி, இன்னொரு திட்டமும் இருக்காம். ரண்டு தரப்பின்ர வேட்பு மனுக்களையும் பூதக்கண்ணாடி வைச்சுப் பாக்கினமாம். எந்தத்தரப்பாவது அதில் சின்னப்பிழைவிட்டிருந்தாலும், முட்டையில மயிர் பிடுங்கிற மாதிரி, அந்தப் பிழையைக் காரணம் காட்டி, அவையின்ர வேட்புமனுவைத் தள்ளுபடி செய்திட்டு மற்ற ஆளை போட்டியில்லாமல் தலைவராக் கிடலாமெல்லோ.**

**அதுவும் பிசகினால் கடைசிப்பிளானும் இருக்காம். வாற வருசம் எப்பிடியும் ரண்டு தேர்தலாவது நடக்கத்தான் போகுது. அது மட்டும் உட்கட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கிறதுதான் அந்தக் கடைசித் திட்டமாம். பாப்பம் என்ன நடக்கப்போகுதெண்டு.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சென்னையை மூழ்கடித்த மிக்ஜம்




சென்னை, டிசெ.6

**வங்களா விரிகுடாவில் உருவான மிக்ஜம் புயல் காரணமாக வடதமிழகக் கடலோரப் பகுதிகள், தெற்கு ஆந்திரா பகுதிகளில் கடும் மழை கொட்டித் தீர்த்தது. அதனால் சென்னையின் பல பாகங்கள் வெள்ளத்தில் மூழ்கின.**

சென்னையில் 48 மணிநேரத்தில் 47 சென்ரிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்ததால் அனைத்து இடங்களும் வெள்ளத்தில் மூழ்கின. வீதிகளில் வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சீரற்ற காலநிலையால் சென்னையில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடும் காற்றுடன் பெய்த மழையால் மரங்கள், சுவர்கள், மின்கம்பங்கள் சாய்துள்ளன.

கும்மிடிப்பூண்டியில் இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி முகாமும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அங்கு 937 குடும்பங்கள் வசிக்கும் நிலையில், அவர்களது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

தற்போது வடதமிழகக் கடலோரப் பகுதியில் இருந்து விலகிச் சென்றுள்ள நிலையில், மழை ஓய்ந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள், போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. (எ-இ)

## விமான சேவைகள் ஆரம்பம்

சென்னை, டிசெ.6

கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த சென்னை விமான நிலைய சேவைகள் நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பமாகின. விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், குறைந்தளவான விமானசேவைகளே நேற்றுமுன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, சீரற்றகாலநிலை காரணமாக சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவையும் நிறுத்தப்பட்டிருந்தது. (எ-இ)

## இஸ்ரேல் தாக்குதல்; அந்தரிக்கும் காஸா மக்கள்

காஸா, டிசெ.6

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்தநிலையில், காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. போர் நிறுத்தத்தின் பின்னரான இஸ்ரேலின் தாக்குதல்களால் 100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் 7 நாள்கள் நீடிக்கப்பட்ட நிலையில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் எல்லையில் தாக்குதல் நடத்தினர் என்று இஸ்ரேல் தரப்பு குற்றஞ்சாட்டுகின்றது. இஸ்ரேல் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் காஸாவின் வடபகுதியில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் தெற்கு மற்றும் முகாம்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். தற்போது தெற்கு காஸாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்துள்ள நிலையில், அங்கிருக்கும் மக்களை எகிப்து எல்லையை அண்மித்த பகுதிக்கு இடம்பெயர இஸ்ரேல் அறிவுறுத்தியுள்ளது. இதனால் தங்குமிடம் இல்லாது மக்கள் தவிக்கின்றனர் என்று சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்தும் பிரிட்டன்

லண்டன், டிசெ.6

குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்காக பிரிட்டன் புதிய கடுமையான விசா நடைமுறைகளை அறிவித்துள்ளது.

குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை தொடர்ந்து அதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவித்திருந்த நிலையிலேயே பிரிட்டன் புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

கடந்த வருடம் மூன்று இலட்சம் பேர் பிரிட்டனுக்கு வந்தனர் எதிர்காலத்தில் அது சாத்தியமில்லை என உள்துறை அமைச்சர் ஜேம்ஸ் கிளெவேர்லி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சுகாதார பராமரிப்பு தொழிலாளர்கள் பிரிட்டனுக்கு தங்களை நம்பியுள்ளவர்களை அழைக்க முடியாது என்றும் பிரிட்டனின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## 191 வயதான ஜோனாதன்

நியூயோர்க், டிசெ.6

செயின்ட் ஹெலனா தீவில் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு ஆமை, உலகின் மிக வயதான ஆமை என்ற சிறப்பை பெற்று கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

வயதானாலும் சுறுசுறுப்புடன் வலம் வரும் ஜோனாதன், இந்த ஆண்டு 191ஆவது பிறந்தநாளை கொண்டாடுகின்றது. இது தொடர்பான காணொலியை கின்னஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

ஜோனாதன் என அழைக்கப்படும் குறித்த ஆமை கி.பி. 1832ஆம் ஆண்டு பிறந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆமை 1882இல் செசல்சில் இருந்து செயின்ட் ஹெலனா தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஆமையின் வேகமும் சுறுசுறுப்பும் குறைவதற்கான அறிகுறி இல்லை என அதற்கு சிகிச்சை அளித்து வரும் கால்நடை மருத்துவர் ஜோ ஹோலின்ஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. அக்கம்பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**இடபம்:** தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள்.

**கடகம்:** கடந்த இரண்டு நாட்களாக கணவன் மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**சிம்மம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனம் புரியாத கவலைகள் பயம் வந்து போகும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிலரின் தவறுகளை சுட்டு காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**கன்னி:** எளிதில் முடித்துவிடலாம் என்ற காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்:** தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உறவினர்களின் பலவீனத்தை உணருவீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**தனுசு:** கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். எதிர்பார்த்த பணம் வரும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**மகரம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்கு உள்ளாவீர்கள். நன்றிமறந்தவர்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**கும்பம்:** கடினமான வேலைகளை மாறுபட்ட அணுகுமுறையால் சாதித்துக் காட்டுவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக அமையும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் வரும்.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வழக்குகள் சாதகமாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். தொட்டது துலங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்கள்

## கத்திக் குத்து

கொழும்பு, டிசெ.6
காணித் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் தனது சகோதரியை கத்தியால் குத்திக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பல்லம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## நிகழ்வில் மோதல் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.6
ஜா-எல பிரதேசத்தில் ஹொட்டல் ஒன்றில் நடந்த விருந்துபசாரத்தில் ஏற்பட்ட மோதலில் நீச்சல் தடாகத்தில் தள்ளி வீழ்த்தப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)

## சகோதரனைக் கொன்று எரித்தவர் கைது


கொழும்பு, டிசெ.6
58 வயதான தனது சகோதரனை அடித்துக் கொன்று அவரது உடலை ஓடையில்போட்டுஎரித்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
உடுகமவத்த, ஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய நபரே கொல்லப்பட்டுள்ளார். (எ-இ)

## வெடிபொருள் மீட்பு

சாவகச்சேரி, டிசெ.6
மீசாலை மேற்கில் காணி ஒன்றில் இருந்து வெடிபொருள் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அனுமதி பெற்று வெடிபொருளை அகற்றும் நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்தனர். (எ-9)

## கசிப்பு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.6
பத்து லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 28 வயதான இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)



# அனைத்து மாணவருக்கும் தொழிற் கல்வி கற்கைகள்

கொழும்பு, டிசெ.6
**க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாத இரு பிரிவினரும் இலங்கையில் தொழிற் கல்வியைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவம் தொடர்பான பணிப்பாளர் சமன் ரூபசிங்க தெரிவித்தார்.**

நாடளாவிய ரீதியில் 525 பாடசாலைகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றும், தொழிற்பயிற்சி நிலையத்தால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு இந்தப் பாடநெறிகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)



வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தால் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களின் சீருடைக்காக ஒரு தொகை நிதி அண்மையில் வழங்கப்பட்டது. (ம-125)

# கொழும்பு அபிவிருத்தி அறிக்கை கோரும் ரணில்



கொழும்பு, டிசெ.6
கொழும்பு, கங்காராம, போர வாவி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் மற்றும் அதன் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை உடனடியாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட நிறுவன பிரதானிகளுக்கு சாகல ரத்நாயக்க அறிவித்துள்ளார். (எ-இ)

# பெரமுன இல்லையேல் அரசின் கதை முடியும்

## ரோஹித மிரட்டல்தொனி

கொழும்பு, டிசெ. 6
பொதுஜன பெரமுனக் கட்சியால்தான் இந்த அரசு ஓடுகின்றது. எமது ஆதரவு இல்லையேல் அரசின் ஆயுள் முடிந்துவிடும் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.
பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கியதால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். எமது கட்சியின் ஆதரவு இருப்பதால்தான் அரசு பயணிக்கின்றது. பெரமுனவின் ஆதரவு இல்லாவிட்டால் அரசின் கதை முடிந்துவிடும். அரசுக்கான எமது ஆதரவு தொடரும்.
சோறு சரியில்லை, கறி சுவையில்லை என்பதற்காக விவகாரத்துச் செய்ய முடியுமா? வாழப்பழகவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-44)


## இராணுவ மகளிர் படை நடைமுறை புதுப்பிப்பு

கொழும்பு, டிசெ.6
இராணுவ மகளிர் படை அணிக்கான நடைமுறைகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
பெண் இராணுவ அதிகாரிகள் இராணுவத்தின் உயர் பதவிக்குத் தெரிவாகும் வகையில் நடைமுறைகள் மாற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம்

# இடைக்கால நிர்வாகம் விசாரணை 13ஆம் திகதி

கொழும்பு, டிசெ.6
இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்துக்கு இடைக்கால நிர்வாகத்தை நியமிப்பதற்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க எடுத்த தீர்மானத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 13 ஆம் திகதி மீண்டும் அழைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, இதனுடன் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தமது கட்சிக்காரரின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு கால அவகாசம் தேவை என நீதிமன்றில் தெரிவித்தார்.
முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நீதிமன்றத்துக்கு உறுதியளித்திருந்தார். (எ-இ)





ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 144ஆவது குருபூசை தின சிறப்புரை நிகழ்வு, இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் மற்றும் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாதகலில் மாணவர்களுக்கு இலவச தென்னங்கன்றுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 6
மாதகலைச் சேர்ந்த ஐந்து முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களுக்கும், மூன்று ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர்களுக்குமென மொத்தமாக 400 மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இலவசமாகத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.
மாதகல் நுணசை முருகன் ஆன்மிக அறக்கட்டளையின் கோரிக்கைக்கிணங்கப் புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வசிக்கும் அமெரிக்க ஆன்மிகஅறக்கட்டளைப் போசகரும், பொறியியலாளருமான ஞான சின்னையாவின் ஒழுங்குபடுத்துதலில் அமெரிக்காவில் வசிக்கும் பொறியியலாளர் ஈஸ்வரனின் நிதி அனுசரணையில் குறித்த தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-66)

## கஜமுகசங்காரம்

யாழ்ப்பாணம், டிசெ. 6
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் சஷ்டி இறுதிநாளான எதிர்வரும் 17ஆம் திகதி கஜமுகசங்காரம் நடைபெறவுள்ளது.
விநாயகர் சஷ்டி விரதத்தை முன்னிட்டு இலட்சார்ச்சனை இடம்பெற்று வருகின்றது.
எதிர்வரும் 17ஆம் திகதி வரை இடம்பெறும் இந்த உற்சவத்தில் தினமும் காலையில் சிறப்பு அபிஷேகப் பூசைகள் இடம்பெற்று மாலை 6.30 மணிக்கு பஞ்சமுக விநாயகருக்கு இலட்சார்ச்சனை இடம்பெறுகின்றது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-17)



### யாழ். பல்கலைக்கழக
## விஞ்ஞான அலகின் நடைபவனி

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு செய்வதனை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடைபவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இணைந்த சுகநல விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சி.சபாஆனந்த் மற்றும் விரிவுரையாளர்கள் கூட்டாகக் கொடியசைத்து ஆரம்பித்து வைத்த நடைபவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ். வீதி, மருத்துவமனை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றிலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடைபவனி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது. (ம-125)



## சொரூப பவனி

மன்னார், டிசெ. 6
மன்னார் மறைமாவட்டத்தின் கீழியன்குடியிருப்பு பங்கின் புனித சவேரியார் ஆலய பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.
பங்குத் தந்தை அருட்பணி லோறன்ஸ் லியோன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பேசாலை பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அடிகளாரால் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி முடிவில் திருச்சொரூபபவனிஇடம்பெற்றது. (ச-60)

## வாசிப்பாற்றலை மேம்படுத்தல்

வவுனியா நகரசபையின் அனுசரணையுடன் வவுனியா நகர சபை பொதுநூலகத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களின் வாசிப்பு ஆற்றல் திறன்களை மேம்படுத்தும் நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. 'உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-75)


## மல்லாவி ம. கல்லூரி மாணவர்கள் தேசியம்

வவுனியா, டிசெ. 6
இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் முல்லை மாவட்டத்துக்கான இளையோர் சதுரங்கப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் மல்லாவி மத்திய கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.
வி. அபிசாந், கோ.மலரவன், க. தீபிதன் ஆகிய மாணவர்களே தேசிய மட்டத்துக்குத் தெரிவாகினர். (ச-75)



## கலை நிகழ்வுகள்


கிளிநொச்சி சிங்கள மொழிப் பயிற்சியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளின் இறுதிநாள் நிகழ்வு மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) இ.நளாஜினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (ரி-75)



செட்டிகுளம் ஆதார மருத்துவமனையின் வருடாந்த குருதிக்கொடை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பலநூறு தன்னார்வலர்கள் ஆர்வத்துடன் இதில் கலந்துகொண்டனர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 11 . 1948



மறைவு 05 . 12 . 2023

### திரு.கணபதிப்பிள்ளை சின்னையா

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், சீமேந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)**

துன்னாலை கரவெட்டியை பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னையா அவர்கள் நேற்று (05.12.2023) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தியாகராஜா – நாகரட்ணாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக்கணவரும், நிலானி (கொழும்பு), நிசாந்தன் (கணக்காளர், அவுஸ்திரேலியா), நிசாந்தினி (Water Board) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷான்(Shierra Steel Colombo), அபர்னா (Managing Director, MR Seal), அருள்குமரன் (Water Board) ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.தணிகாசலம் (அவுஸ்திரேலியா), குணமணி (கொழும்பு), காலஞ்சென்ற Dr.இரத்தினகோபால், மற்றும் சுந்தரலிங்கம் (துன்னாலை), கனேசலிங்கம் (ஜேர்மனி), சறோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதீஸ்வரி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சட்டத்தரணி அருமைநாயகம் மற்றும் Dr.சுபாஷினி (அவுஸ்திரேலியா) நகுலேஸ்வரி (ஜேர்மனி), Eng.கனகலிங்கம், ஜெகநாதன்(லண்டன்), குகதாசன் (கொழும்பு), ஜெயகுமாரன் (பிரான்ஸ்), ஜெயசோதி ஆகியோரின் மைத்துனரும், தரஞ்சன், கெஷ்வின், நிர்த்துலா, சுவராகினி, சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.12.2023) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்புதுறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25, புது வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 677 9274 (மகன்)

(CS 27295) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தீர்வைத் தேடவேண்டியது நாமே

வடக்கில் போதைப்பொருள்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு, இளைஞர்கள் மறைமுகமாகக் கொல்லப்படுகின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அரசாங்கத்தின் மீதும், பாதுகாப்புத் தரப்பினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டை இலகுவாகப் புறமொதுக்கிவிடமுடியாது.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக பல தசாப்தங்களாக போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவர்கள் அவற்றை எதிர்கால சந்ததிகளுக்கு ஊடுகடத்தி அதன் வீரியம் குறையாது காத்துவந்தனர். ஆனால், இப்போதுள்ள தமிழ் இளைய சமுதாயம், தாராளமாகக் கிடைக்கும் போதைப்பொருள்களால் திசைமாறிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் இதுவரை கட்டிக்காத்த சமூகக் கட்டமைப்பு சிதைவுறுவதைக் கண்முன்னே காணமுடிகின்றது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் தமிழ்ப்பகுதிகள் இல்லாத காலத்தில் போதைப்பொருள் என்பது அரிதான ஒன்றாகவே இருந்தது. ஆனால் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுமையாகக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் போதைப் பொருள் பாவனை பெரும் சமூகப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. இலங்கையின் போதைப் பொருள் மையமாக வடக்கு மாற்றப் பட்டிருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் - படைப்புலனாய் வாளர்களின் கடும் கண்காணிப்புக்குள் இருந்த காலகட்டத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது.

தமிழர் பகுதிகளில் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி வலிந்து தங்கியிருக்கும் இராணுவமும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய பொலிஸாரும் போதைப்பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர் அல்லது போதைப்பொருளைக் கட்டுப்படுத்த விரும்பாதவர்களாக இருக்கின்றனர். வடக்கில் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரே குற்றவாளிகளுடன் சேர்ந்தியங்குகின்றனர் என்ற குற்றச்சாட்டும் உண்டு. வடக்கில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று கூறப்பட்டாலும், இதுவரை போதைப்பொருளை விநியோகிக்கும் பிரதான சூத்திரதாரிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவில்லை. வடக்கு - கிழக்கின் ஒவ்வொரு நகர்வையும் கழுகுப்பார்வை கொண்டு கண்காணிக்கும் படைப் புலனாய்வினருக்கு இது தொடர்பான தகவல்கள் தெரியாது என்பதை நம்புவதற்கு எவரும் முட்டாள்கள் இல்லை.

வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைக் கோரிக்கைகளை நலிவுறச் செய்வதற்கான - எதிர்காலச் சந்ததியை வீரியமற்றதாக மாற்றுவதற்காகப் பேரினவாதத்தால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட நகர்வே வடக்கு - கிழக்கில் தலைவிரித்தாடும் போதைப்பொருள்கள் என்பதும் உண்மையாக இருக்கலாம். அவ்வாறு இருக்குமானால் நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, எங்கு முறையிட்டும் அது பயன்தரப்போவதில்லை. தமிழ் அரசியல் தலைவர்களும், மக்களுமே இதற்கான தீர்வைத் தேடவேண்டும். போதைப்பொருள் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறினால் - அதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளைத் தேடாவிட்டால், இளைஞர்கள் மட்டுமல்ல, தமிழினமும் மெல்லச் சாகும் என்பதே உண்மை.



# கோத்தாபய, பஸில் மீது நட்டஈடு கோரி வழக்கு!

**கொழும்பு, டிசெ.6**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, முன்னாள் நிதி அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோரிடம் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.**

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அகில இலங்கை நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் மிலிந்த பிரேமரத்ன, இந்த வழக்குகளை சிவில் வணிக நீதிமன்றத்தில் அல்லது மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்று தெரிவித்தார். (எ-இ)

# டீசலில் முறைகேடு

கொழும்பு, டிசெ.6

மில்கோ நிறுவனத்துக்குச் சொந்தமான அம்பேவெல தொழிற்சாலைக்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் கடந்த எட்டு ஆண்டுகளில் வழங்கப்பட்ட டீசல், மில்கோ தொழிற்சாலையின் எண்ணெய்த் தொட்டிகளுக்கு இறக்கப்படவில்லை என்று தேசிய தணிக்கை அலுவலகம் கூறுகிறது.

எரிபொருள் இருப்பு பெறும் பாதுகாப்புப் பிரிவின் ஆவணங்களை ஆய்வு செய்த போது இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது என்று கடந்த 3ஆம் திகதி வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எரிபொருள் முறைகேட்டில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கணக்காய்வு பரிந்துரை செய்துள்ளது. (எ-இ)

# வடமராட்சியில் டெங்கு தீவிரம்!

## ஒரே மாதத்தில் 52 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 6

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களது எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் டெங்குக் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்றவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துள்ளது.

டெங்குக் காய்ச்சல் பாதிப்புடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில், கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 14 பேரும், ஒக்ரோபர் மாதத்தில் 32 பேரும் சிகிச்சை பெற்றிருந்த நிலையில் நவம்பர் மாதத்தில் டெங்குக் காய்ச்சல் பாதிப்பு காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை 52ஆக அதிகரித்துள்ளது. (ம-100)

# நாடு கடத்தப்பட்ட 35 இலங்கையர்கள்

இலங்கைக்கு வரமுடியாமல் குவைத்தில் நீண்ட காலமாக விசா இன்றிச் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 35 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் நேற்றுமுன்தினம் குவைத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். (எ-இ)

# ஓ.எம்.பி. முறைப்பாடுகள் அடுத்த ஆண்டுக்குள் தீர்வு

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்குக் கிடைத்த அனைத்து முறைப்பாடுகளையும் அடுத்த வருடத்துக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தில் சுமார் 14 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த அமைச்சை நாங்கள் பொறுப்பேற்றபோது 62 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இன்றைய நிலைவரப்படி 4 ஆயிரத்து 795 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று அவர் தெரிவித்தார். (எ-இ)

## நாளை

07.12.2023

**வியாழக்கிழமை**

**கார்த்திகை 21**

சுபநேரம் : 07.47 - 09.17

ராகுகாலம் : 01.47 - 03.17

## நாளொரு நல்வார்த்தை

வெற்றி ஒரு மோசமான ஆசிரியர்
அது புத்திசாலிகளையும் மயக்கி
தோல்வியே நமக்கு இல்லை
என்று நினைக்க வைத்துவிடும்.

– பில் கேட்ஸ் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பேரவைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ
40 வயது,சொந்தமாகத் தொழில் புரியும்
மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: **077 905 8615**
வைபர் & வாட்ஸ்ஆப்

**பணியாளர் தேவை**

P.P.T நிறுவனத்திற்கு அலுவலக
பணியாளர்கள் உடனடி தேவை.
Bus Booking.
Bus மேற்பார்வையாளர்கள்
போன்ற வேலைக்கு.
**T.P: 077 711 4226**

தேசிய விளையாட்டுப் பேரவை மற்றும் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழு ஆகியவற்றுக்குப் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

15 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராக கலாநிதி மையா குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் ஏனைய பிரதிநிதிகளாக ஐ.யூ.விக்ரமசூரிய, ஸ்ரீயானி குலவன்ச, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹொட்டி, பேராசிரியர் அர்ஜுனடி சில்வா, இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் புஞ்சிஹேவா, பேராசிரியர் ரியர் அட்மிரல் ஷெமால் பெர்னாண்டோ உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(எ-இ)

# உணவுப்பாதுகாப்புத் திட்டத்தை மேம்படுத்த 50,000 மீன்குஞ்சுகள்

*கிளிநொச்சி, டிசெ. 6*

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட புதுமுறிப்பு மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் அண்மையில் விடப்பட்டுள்ளன.

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் சமூக மட்ட அமைப்புகளுடன் இணைந்ததான மீன் குஞ்சுகளை வைப்பிலிடும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடந்த மாதம் ஏற்கனவே ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் வழங்கப்பட்ட நிலையில், அதற்கு மேலதிகமாக 50 ஆயிரம் மின் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. (ம-113)

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் கிருபானந்தன் (வர்த்தகர்)



வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் புளத்கொகுபிட்டியவை வசிப்பிடமாகவும் கொண்ட வர்த்தகர் சிவப்பிரகாசம் கிருபானந்தன் கடந்த (04.12.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் விசாலாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், சோமாவதி (அதிபர். யா/நாரந்தனை றோ.க.பாடசாலை) யின் பாசமிகு கணவரும், லலிதாம்பிகை, வேதநாயகி, தையல்நாயகி அம்மா (விமலா) மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசூரியன், தற்பரானந்தன், கலைச்செல்வி ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும், கணபதிப்பிள்ளை, தவமணிதேவி, அமரர் ஸ்ரீபராபரன், குகவரதராஜா ஆகியோரின் மைத்துனரும், ஷயா, சரண்யா ஆகியோரின் ஆருயிர் தந்தையும், சத்தியனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே.இல: 077 990 5565**

(CS 27294 )A-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



## மூத்த கலைஞர் மறைவு

முல்லைத்தீவு மூதத கலைஞர் இராமுப்பிள்ளைமுருகுபிள்ளை கிராமிய கரகாட்டம், கிராமிய நடனம், கிராமங்களின் பட்டி தொட்டி போன்ற நாட்டுப்புறக் கலைகளில் புகழ்பெற்றவராவார். (ரி-75)



## வீதியில் குழிகள் மக்கள் சிரமம்!

*யாழ்ப்பாணம், டிசெ. 6*

மானிப்பாய் வீதியில் சண்டிலிப்பாய் வலி.தென் மேற்கு பிரதேச செயலப் பிரிவுக்குட்பட்ட ஐந்து கண் பாலத்துக்கருகில் காணப்படும் குழிகளால் மக்கள் சிரமங்களை எதி கொண்டுள்ளனர்.

வீதியால் பயணிப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும், இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-ரி)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 03 . 1968



மறைவு 04 . 12 . 2023

### கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி

சாயுடை மாவிட்டபுரத்தினை பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி கடந்த (04.12.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னபூரணத்தின் மகனும், குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி இரத்தினம் தம்பதியரின் மருமகனும், தயாரூபியின் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) அன்புக் கணவரும், கயானென், ரிஷிகேசன், தனஞ்சயன் (மாணவன், யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணதாசன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மரத்தினம் தயாபரி (கனடா), உதயகுமார் தயாநிதி, தயாபரன் (தொழிநுட்ப உத்தியோகத்தர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) தயாளன் விவேகானந்தி (இலண்டன்), தர்மராசா, ஜனனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**
**077 374 7563**

(CS 27287) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 09 . 1934



மறைவு 05 . 12 . 2023

### சிவசுந்தரம் அன்னம்

போயிட்டியை பிறப்பிடமாகவும் கீரிமலையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுந்தரம் அன்னம் நேற்று (05.12.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வடிவேலு சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சாந்தகுணதேவி மற்றும் அருட்சோதி சற்குணதேவி (தங்கா), சிவசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசோதி (தாராசிங்கம்), அமரர் தனலட்சுமி, பரமேந்திரன், தனுசியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசம்மா, பொன்னு, இரத்தினம், செல்லம், சுந்தரலிங்கம், இளையதம்பி, இராஜேஸ்வரி, தர்மலிங்கம் மற்றும் தெய்வானைப்பிள்ளை, சிவஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமலர் (ஆசிரியர், யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி), ஜெயக்குமாரன், பாலகிருஸ்ணன் (பிரான்ஸ்), சௌரியா (பிரான்ஸ்), சாந்ததீபன், கௌசிகா (வங்கி அலுவலகர் H.N.B-Hatton), அருள்ராஜ் தர்மினி (முன்பள்ளி ஆசிரியை), பால்ராஜ், பிரியதர்சினி, அஜந்ராஜ்-லோஜினி, கிருசா, பானுஜா (மாணவி, பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), யசிந்தன், சயன்ராஜ், ரவிராஜ், தியாசன் (லண்டன்), யாழவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டக்சயன், பவிகேஸ், பிரணவி, ஜனார்த்தினி ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நகுலேஸ்வரா வீதி,**
**கீரிமலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 770 5038, 077 2268 662**

(CS 27295) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான தடைகளை இலங்கைக்கு விதியுங்கள்

## பிரிட்டன் எம்.பி.க்கள் வலியுறுத்து

இலங்கையில் தமிழர் பகுதிகளில் இராணுவமயமாக்கல் தொடர்வதை சுட்டிக்காட்டியுள்ள பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கு பொருளாதாரத் தடைகளை விதித்து அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.
தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனல், இலங்கையின் நடவடிக்கைகள் பிரிட்டனினதும் சர்வதேச சமூகத்தினதும் கூட்டுத் தோல்வி. இலங்கைக்கு எதிராகத் தடைகளை விதித்தமைக்காக அமெரிக்கா மற்றும் கனடாவைப் பாராட்டுகிறேன். தடைகள் வர்த்தக வரிகள் மூலம் அதிகூடிய அழுத்தங்களை இலங்கைக்குக் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
லிபரல்ஜன நாயக கட்சியின் தலைவர் எட் டேவே, அமெரிக்கா, கனடாவை பின்பற்றி இலங்கையின் இராணுவ அதிகாரிகள் சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக பிரிட்டனும் தடைகளை விதிக்கவேண்டும் - என்றார். (ம)




# சட்டவிரோத மருந்துகள் ராகமையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ.6
அனுமதிப்பத்திரமின்றி மருந்து விற்பனையில் ஈடு பட்டவர்களைக் கண்டறியும் நடவடிக்கையின்போது ராகமை நகரில் சட்டவிரோத மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் உள்ளிட்ட சில பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கம்பஹா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.
கண் வில்லைகள், கண்ணாடிகள் மற்றும் கண் நோயாளர்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. கண் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் 16 வகையான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு பணிபுரியும் 19 வயதுடைய ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# பயங்கரவாதத் தடைச்சட்டம்: மக்கள் எதிர்ப்பில்லையாம்!



*அமைச்சர் அலஸ் கண்டுபிடிப்பு*

**கொழும்பு, டிசெ. 6**
**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கையில் பெரும்பாலான மக்கள் ஏற்கவில்லை என்ற கருத்துடன் உடன்படமுடியாது. சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தினால் இது தெரியவரும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-'பயங்கரவாத தடைச்சட்டத்தை பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை எனவும், அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லைஎன இந்தப் பிரேரணையை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் (சாணக்கியன்) சுட்டிக்காட்டினார். இந்தக் கருத்துடன் உடன்பட முடியாது. உதாரணமாக பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டால் முடிவு என்ன என்பது உங்களுக்கே தெரியும்' - என்றார். (ம-44)

*நீதிமன்றத்தில் குழப்பம்*

# பொலிஸ் அலுவலர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6
நீதிமன்ற நடவடிக்கையின்போது குழப்பம் விளைவித்தார் என்று தெரிவித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் அலுவலர் நேற்றையதினம் ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வழக்கு ஒன்றுக்காக வந்திருந்த, இளைஞருடன் சிவில் உடையில் வந்திருந்த பொலிஸ் அலுவலர் (மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அலுவலர்) நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டு ஒருநாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இந்த நிலையில் அவர் நேற்றையதினம் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-100)

## முதியோர் மகிழ்வகம் மாந்தையில் திறப்பு

*முல்லைதீவு, டிசெ. 6*
*மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் பாண்டியன்குளம் பிரிவில் முதியோர் மகிழ்வகத்தை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் திறந்து வைத்தார். (ரி-75)*

# டெங்கு விழிப்புணர்வுக்காக வீதி நாடகத்துக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 6
டெங்குத் தொற்றுத் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி நாடகமொன்றை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் நடத்தவுள்ளது.
வித்தியாலய மாணவர்களின் நடிப்பில் உருவாகியுள்ள இந்த விழிப்புணர்வு வீதி நாடகம் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 5 இடங்களில் நடைபெறும் என்று பாடசாலை அதிபர் என். ரவீந்திரன் அறிவித்துள்ளார்.
இதன்படி, காலை 9 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலும், காலை 9.40 மணிக்கு ஆவரங்கால் விவேகானந்தா முன்பள்ளியிலும், முற்பகல் 10.20 மணிக்கு ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்திலும், முற்பகல் 11 மணிக்கு ஆவரங்கால் மத்தி முன்பள்ளியிலும், முற்பகல் 11.40 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும் வீதி நாடகம் நடைபெறும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றத்தை ஏற்படுத்துமா மாற்றுத்திறனாளிகள் தினம்?

*இவ்வாண்டு, 'மாற்றுத்திறனாளிகளுக்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளை மீட்பதற்கும் அடைவதற்குமாக மாற்றுத்திறனாளிகளின் செயற்பாட்டில் அவர்களுடன் ஒன்றிணைவோம்' எனும் கருப்பொருளில் உலகளாவிய ரீதியில் மாற்றுத்திறனாளிகள் தினம் டிசெம்பர் மூன்றாம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.*

■ நா.கீதாகிருஸ்ணன்
செயலாளர்,
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

உலகளாவிய ரீதியில் நலிவுற்ற ஒரு சமூகமாக மாற்றாற்றலுடையவர்கள் காணப்படுகின்றனர். உலக சனத்தொகையில் சுமார் 10 வீதமானவர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆவர். இலங்கையில் 2011ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் 20.4 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் 16 லட்சத்து 17 ஆயிரத்து 924 பேர் மாற்றுத்திறனாளிகளாகக் காணப்படுகின்றனர். எனவே மாற்றுத்திறனாளிகள் தொடர்பான அறிவை மக்கள் பெற்றிருப்பது அவசியமானது. இவர்களையும் சமூகமாந்தர்கள் தம் உறவுகள் போன்று அரவணைத்துப் பயணிக்கும்போதுதான் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு ஆரோக்கியம் பெறும். இவர்கள் எதிர்கொள்ளும் தடைகளுக்கு தீர்வுகளை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இவ்வாறான ஒரு சூழல் ஏற்படுகின்ற போதுதான் சமூகமும் நாடும் ஆரோக்கியமான அபிவிருத்தியினை அடையலாம்.

## மாற்றுத்திறனாளிகள் உருவாவதற்கான சில காரணிகள்

**1) பிறப்பிற்கு முன்னரான காரணிகள்**
மரபணுக் குறைபாடுகள், தாயின் ஆரோக்கியமும் வயதெல்லையும், கருவுற்ற தாயின் போசாக்கு, உட்கொள்ளும் மாத்திரைகள், கதிர்வீச்சு மற்றும் நோய்கள், இரத்த உரித்து திருமணங்கள், கருப்பையில் சிசுவின் அமைப்பு புறநடையாகக் காணப்படல், தொப்புள் கொடி சிசுவின் கழுத்தை சுற்றியிருத்தல்

**2) பிறப்பின் போதான காரணிகள்**
குறை மாத பிரசவமும் எடை குறைந்த குழந்தைப் பிறப்பும், பிறப்பின் போது சிசுவின் சுவாசம் தடைப்படல், ஆயுதப் பிரசவத்தினால் அல்லது பிற காரணங்களால் சிசுவிற்கு ஏற்படும் பாதிப்புகள், தாய்க்கு அளிக்கப்படும் மயக்க மருந்து அல்லது வலி நிவாரணிகள், தாயின் இடுப்பு எலும்பு குறுகியிருத்தல்

**3) பிறப்புக்குப் பின்னரான காரணிகள்**
நோய்ப் பாதிப்புகள், தவறான மருத்துவச் சிகிச்சைகள், விபத்து மற்றும் யுத்தங்களால் ஏற்படும் காயங்கள், உள ரீதியான நெருக்கடிகள்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள்.

- **விசேட கல்வி**

உடல், உள, சமூக மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள், சாதாரண மாணவர்களை விட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் தேர்ச்சிமட்டத்தை அடையமுடியாது தத்தளிக்கின்றனர். அவ்வாறான மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியே விசேடகல்வி ஆகும்.

- **உட்படுத்தல் கல்வி**

இன்று உலக நாடுகள் எல்லாவற்றினாலும் மாற்றுத்திறனாளிகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஏற்பாடாக உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு காணப்படுகின்றது. அதாவது மாற்றுத்திறனாளிகள் தாம்வாழும் சூழலிலுள்ள பாடசாலையில் சாதாரண மாணவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து கற்றலே உட்படுத்தல் கல்வி எனலாம்.

**இலங்கை அரசியல் யாப்பில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட சட்ட ஏற்பாடுகள்.**

1. மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் உறுப்புரை 12(1) ஆனது சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனவும், சட்டம் அனைவரையும் சமமான முறையில் பாதுகாக்கவேண்டும் எனவும் கூறுகின்றது.
2. உறுப்புரை 12(2) ஆனது மொழி, இனம், மதம், தொழில், கலாசாரம், அரசியல் போன்ற காரணங்களுக்காக வேறுபாடுகளைக் காட்டமுடியாது எனப் பிரகடனப்படுத்துகின்றது.
3. உறுப்புரை 12(4) பெண்கள் சிறுவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நன்மைகளுக்காக விசேட சட்டங்களை இயற்ற முடியும் எனவும் இதனை ஒரு வேறுபாடாகக் கருத முடியாது எனவும் பிரகடனப்படுத்துகின்றது.
4. அத்தியாயம் 6 உறுப்புரை 27(2) (உ) மற்றும் 27(9) ஆனது அரச கொள்கைகள் வகுத்தல் பற்றி எடுத்துக் கூறுகிறது. அந்த வகையில் அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த அரசு பணியாற்ற வேண்டும் என எடுத்துக்கூறுகின்றது
5. இலங்கை நாடாளுமன்றம் 1996இல் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்ட இலக்கம் 28 ஐ உருவாக்கியது. இந்தச்சட்டத்தின் பிரதான நோக்காக அமைவது மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தலும், மேம்படுத்தலும், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபையை உருவாக்குதலும் ஆகும்.
6. இந்தச் சட்டத்தின் பிரிவு 37ஆனது பொருள்கோடல் பகுதியாக அமைகிறது. இதில் மாற்றுத்திறனாளிகள் என்ற சொல் வரைவிலக்கணப்படுத்தப்படுவதை அவதானிக்கலாம். மேலும் பிரிவு 2 ஆனது மாற்றுத்திறனாளிகளுக்காக தேசியசபையின் உருவாக்கம் பற்றி எடுத்துக் கூறுவதோடு பிரிவு 3 ஆனது இச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றியும் பதவிக்காலம் பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. அந்த வகையில் 21 உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் பதவி வகிக்கலாம். மேலும் பிரிவு 12ஆனது இந்தச்சபையின் பிரதான பணியாக மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை விருத்திசெய்து பாதுகாத்து மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எனக் கூறுகின்றது.
7. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரதான பிரிவாக அமைவது 23ஆம் பிரிவாகும். இப்பிரிவில் மாற்றுத்திறனாளிகளுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற வேறுபாடுகளைக் களையும் முகமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் வேலைகளுக்காக ஆட்களைச் சேர்த்தல், கல்வி நிறுவனங்களில் கற்றல் நடவடிக்கைகளுக்காக மாணவர்களை உள்வாங்குதல் போன்ற நடவடிக்கைகளின்போது மாற்றுத்திறனாளி என்ற காரணத்துக்காக அவர்களை இணைக்காது விட முடியாது எனவும், மேலும் மாற்றுத்திறனாளி ஒருவர் தான் மற்றைய சாதாரண நபர்களைப் போல அரச நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளில் அணுகுவதற்குரிய அனைத்து வசதிகளையும் மேற்கொண்டிருத்தல் வேண்டும் எனவும் கூறுகின்றது. அந்த வகையில் மேற்கூறப்பட்ட 23ஆவது பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மாற்றுத்திறனாளி ஒருவர் அரசமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண மேல் நீதிமன்றுக்கு மனு மூலம் விண்ணப்பித்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
8. கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் தேசியசபையின் மேற்பார்வையில் 2003ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசியக் கொள்கை வெளியிடப்பட்டது. அந்தக் கொள்கையில் பல்வேறு புதிய விடயங்கள் உள்வாங்கப்பட்டபோதிலும் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் இந்தக் கொள்கையை நீதிமன்றத்தால் வலுப்படுத்தமுடியாமை போன்ற காரணங்களால் செயலற்றதாகவே காணப்படுகின்றது. மேலும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் நடைமுறையில் வலுவற்ற சட்டமாகவே காணப்படுகின்றது.
9. கல்வித்துறையைப் பொறுத்தவரையில் 1972ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கல்விக் கொள்கையினூடாக குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்த மாற்றுத்திறனாளிகள் சாதாரண பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளுக்காக உள்வாங்கப்பட்டனர். இதனை மேலும் வலுப்படுத்தும் முகமாக 1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட உட்படுத்தல் கல்விக் கொள்கையூடாக அனைத்து மாற்றுத்திறனாளிகளும் சாதாரண பாடசாலைகளில் அனுமதிக்கப்படவேண்டும் என பிரகடனப்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர உயர்கல்வியைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கமைய அடிப்படைத் தகைமையுடைய குறிப்பிட்ட வீதமான மாற்றுத்திறனாளிகள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர்களுக்குரிய சகல வசதிகளையும் அந்தப் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ளவேண்டும் எனவும் எடுத்துக்கூறுகின்றது.
10. அரசாங்க நிர்வாக ஒழுங்குவிதி 1988ஆனது வேலைவாய்ப்பின்போது தகுதியுடைய 3 வீதமான மாற்றுத்திறனாளிகள் உள்வாங்கப்படவேண்டும் எனக் கூறுகின்றது. இதனை சமூகப் பாதுகாப்புச் சட்டம் 1996 உறுதிப்படுத்துகின்றது.
11. மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகுதல் ஒழுங்குவிதி இல.1(2006)ஆனது மாற்றுத்திறனாளி ஒருவர் எந்த ஒரு தடையுமின்றி பொதுக்கட்டடங்களை தாமாகவே அணுகிச் செயற்படுவதற்கு ஏற்றால் போல் கட்டடங்களை அமைத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.
12. இலங்கை நாட்டின் அடிப்படைச் சட்டமாகிய அரசியல் அமைப்பில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதற்கு மேலதிகமாக நாடாளுமன்றச்சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்று நிருபம் என்பனவற்றின் ஊடாகவும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்துவதை அவதானிக்கலாம்.

மாற்றுத்திறனாளிகள் அன்றாட வாழ்வில் பல இடையூறுகளுக்கு முகம் கொடுக்கின்றனர். வாழுமிடத்தின் தன்மைகள், அவர்களுடன் ஏனையவர்கள் ஏற்படுத்தும் தொடர்புகள், சில நாடுகளின் சட்ட திட்டங்கள், சமூகத்தின் மனோபாவம், பாரபட்சம் போன்றவற்றை இத்தகைய இடையூறுகளாகக் குறிப்பிடலாம். இதன் பெறுபேறு யாதெனில் கல்வி, வேலைவாய்ப்பு, உடலாரோக்கியம் மற்றும் சுகாதாரக் கவனிப்பு, போக்குவரத்து, அரசியல், நீதிநிலை ஆகியவற்றில் சம பங்காளிகளாக முடியாத நிலையில் மாற்றுத்திறனாளிகள் காணப்படுகின்றனர். இந்தத் தடைகள் நீக்கப்பட்டு முழுமையாக சமுதாயத்துடன் இவர்கள் இணைக்கப்படல் வேண்டும். மாற்றுத்திறனாளிகளின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டு இவர்களையும் உலகத்தின் பங்காளர்களாக மாற்றுவதன் ஊடாகவே சமூகமும் நாடும் வளர்ச்சி காணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறை களைவோம்





பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரமானது சர்வதேச ரீதியான பிரசாரமாகும். இது நவம்பர் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி வரையான 16 நாள்கள் முன்னெடுக்கப்படும். டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி மனித உரிமைகள் தினமாகும். இந்த வாரமானது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பெண்களுக்கு எதிரான பாதுகாப்பு மற்றும் கரிசனைக்காக உருவாக்கப்பட்டதாகும். இந்த வருடத்தின் தொனிப்பொருளாக 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒன்றிணைந்து நிறுத்துவோம்' என்பது அமைகின்றது.

எந்த ஒரு சமூகத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்க பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த தடுப்பு நுட்பங்கள் மூன்று வகையாக நோக்கப்படும்.

**1.நிதி முதலீடுகள்**

பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாது ஒழிக்கத் தேவையான சேவைக் கட்டமைப்புகள் பெண்களின் குடும்ப சமூக வலுவூட்டலுக்கான நிதி முதலீடுகளை இது குறிக்கும்.

**2. சமூக மூலதனம்**

சமூக அலகுகளான குடும்பம் மற்றும் பாடசாலை சமூக மட்ட அமைப்புகள் வலுப்படுத்தல் மற்றும் தமது நோக்கங்களுக்கு அப்பால் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான அமைப்புகளின் பங்களிப்பைப் பெறுதல் என்பன சமூக மூலதனமாகும்.

**3. நிபுணத்துவ ஆலோசனை**

துறைசார் நிபுணர்களின் நிபுணத்துவத்தைட்டதரணிகள், மருத்துவர்கள், பெண் உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர்கள், சமூகவியலாளர்கள் போன்றவர்களின்ஆலோசனைகளைப் பெறுவதை இது குறிக்கின்றது.

எமது சமூகத்தைப் பொறுத்தவரை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளில் வீட்டு வன்முறைகளே அதிகளவாகக் காணப்படுகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறை என்றால் 'பெண்களின் தனிப்பட்ட அல்லது பகிரங்க வாழ்வில் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் உடலியல், பாலியல் அல்லது உளவியல் ரீதியாக ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல், அச்சுறுத்தல், பலாத்காரம் என்பவற்றுடன் சுதந்திரத்தைப் பறித்தல்' என வியன்னா பிரகடனம் கூறுகின்றது.

இலங்கையை பொறுத்தவரை இந்த 30 வருடகாலப்பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முறைப்பாட்டுப் பொறிமுறைகள் நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உருவாக்கப்பட்டமை முக்கியமான செயற்பாடு ஆகும். குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் அபிவிருத்திக்கான அமைச்சின்கீழ் உள்ள திணைக்களமான இலங்கைப் பெண்கள் பணியகம், பெண்களைப் பாதுகாப்பதற்கான கொள்கைள் மற்றும் பரிந்துரைகள் முன்னெடுப்பதற்கான தேசிய பெண்கள் குழு, பிரதேசசெயகங்களில் உள்ள சிறுவர் பெண்கள் அபிவிருத்திப் பிரிவு, பெண்கள் சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு, அரசசார்பற்ற நிறுவனங்கள், மருத்துவமனைகளில் பெண்களுக்கான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவையை வழங்கும் நட்பு நிலையம், பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்ட பால்நிலை வன்முறைக்கான முறைப்பாட்டு நிலையம் என்பவை உருவாக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

முறைப்பாடு செய்யப்பட்ட பெரும்பாலான வன்முறைகள் நன்கு அறிமுகமானவர்களால் நடைபெறுகின்றது என்பது மிகவும் மனவருத்தத்துக்குரிய உண்மை. சந்தேகநபர்கள் தொடர்பான சரியான தகவல்களை வழங்கமுடியாத நிலையால் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையில் உள்ள அதேவேளை பாதிக்கப்பட்ட பெண்கள், குடும்பம் மற்றும் சமூகத்தளங்களில் தூக்கி எறியப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள்.

உதயனி நவரத்தினம்
பெண்கள் அபிவிருத்தி உத்தியோத்தர்
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி

பெண்கள் வன்முறைகளால் பாதிக்கப்பட்டால் அது தொடர்பில், பிரதேச செயலக சிறுவர் பெண்கள் அபிவிருத்திப்பிரிவு, சட்ட உதவி ஆணைக்குழு, மருத்துவமனைகளில் உள்ள நட்பு நிலையம், சிறுவர் பெண்களுக்கான பொலிஸ்பிரிவு, பெண்கள் வன்முறைக்கான அவசர உதவி தொலைபேசி அழைப்பு 1938, சிறுவர்களுக்கான அவசர உதவி தொலைபேசி அழைப்பு 1929, வுநட்ட ஐபுP இணையத்தளத்தின் ஊடான பொலிஸ்மா அதிபருக்கான முறைப்பாட்டு முறைமை என்பவற்றின் ஊடாக முறைப்பாடுகளை வழங்கிக் கொள்ளலாம்.

பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை ஒளியேற்றல், சிறுமியர் பெண்கள் மீதான வன்முறையற்ற சமூகத்தை உருவாக்கல் என்பவற்றை நோக்காகக் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும்.

# எதிர்த்து நில் எதிரியே இல்லை!

லக்ஷிகா தர்மராஜா
நுண்ணுயிரினவியலாளர்

அது 1521. ஸ்பானியர்கள் மக்டான் எனப்படும் அச்சிறு தீவில் தரை இறங்கினர். ஸ்பெய்ன் நாட்டுக் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பரப்புவதும் மதமாற்றம் செய்வதும் அவர்கள் நோக்கமாக இருந்தது. மற்றைய குழுத் தலைவர்கள் ஸ்பானியர்கள் நட்புறவுக்குச் சம்மதம் தெரிவித்தனர். ஆனால் ஒரு குழுத் தலைவன் மட்டும் அடிபணிய மறுத்தான். கப்பல் பயணத்தில் பல நாடுகளை வெற்றிகொண்ட எண்ணற்ற பயங்கர ஆயுதங்களை கொண்ட ஸ்பெய்ன் நாட்டு மகலனை வெற்றிகொள்ள யாரால் முடியும்? ராஜா ஹமபோன் மதமே மாறி விட்டார்.

நட்புக்குப் பணியாத அரசை ஆயுதத்துக்குப் பணியவைக்க மகலன் படை தீர்மானித்தது. மூங்கில் கம்புகளும் ஈட்டிகளும் மட்டுமே கொண்ட மக்டானின் (தற்போதைய செபு) ஒரு பகுதியின் தலைவன் அவன். அவன் பெயர் லபுலபு. லபுலபு தன் வீரர்களுடனும், மூங்கில் கம்புகளுடனும் அம்புகளுடனும் இரும்பு வாள்களுடனும் யுத்தத்துக்குத் தயாரானான். மகலன் மீண்டும் மீண்டும் நட்புக்கரம் நீட்டினான். ஸ்பெய்ன் நாட்டிடமும் ராஜா ஹமபோனிடமும் அடி பணிய எச்சரிக்கை விடுத்தான்.லபுலபு எதற்கும் செவிசாய்ப்பதாக இல்லை.

1521, ஏப்ரல் 27இன் நள்ளிரவு. ஸ்பானியப்படை யுத்தப் படகுகளுடன் கரையை நோக்கி வந்தது. ராஜா ஹமபோனின் படகுகள் அவை. அந்தப் படகுகளில் ஸ்பானியப் படைகளும் ராஜா ஹமபோனின் வீரர்களும் இருந்தனர். ஆனால் மகலன் தன் வீரர்களின் திறமையை காட்டி ராஜா ஹமபோனை ஆச்சரியப்படுத்த எண்ணினான். அதனால் ஸ்பானிய வீரர்கள் மாத்திரம் தங்கள் நவீன ஆயுதங்களுடன் போருக்குத் தயாராகினர். லபுலபுவுக்குத் துப்பாக்கிகள் பற்றியோ நவீன யுத்த முறைகளோ தெரியாமல் இருக்கலாம். ஆனால் லபுலபுவுக்குத் தனது பிரதேசத்தையும் சூழலையும் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. தோட்டாக்கள் தீர்ந்து விட்டால் துப்பாக்கிகளை பயன்படுத்தமுடியாது என்பது தெரிந்திருந்தது. குழுத்தலைவன் மகலனின் ஆணையை மட்டும் தான் வீரர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை அவதானித்திருந்தான் லபுலபு.

ஆங்காங்கிருந்த பாறைகளால் படகுகள் கரையைத் தொட முடியவில்லை. ஸ்பானிய வீரர்கள் மகலனுடன் படகுகளில் இருந்து சுட்டுக் கொண்டே இறங்கினார்கள். துப்பாக்கி குண்டுகளுடன் எதிர்வரும் வீரர்களிடம் இருந்து தப்பிக்க சற்றுத் தொலைவில் படைகளை நிறுத்தினான். அனைவரது குறியும் மகலன் மீது இருக்கட்டும் எனக் கட்டளை இட்டான் லபுலபு.

வீரர்களை தொலைவில் நிறுத்தியதால் குண்டடிபடாமல் உயிரிழப்புகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. ஒவ்வொரு வீரரும் ஸ்பானிய வீரர்களுடன் போரிட்டபடியே மகலனை குறிவைத்தனர். ஸ்பானிய வீரர்களின் இரும்புக் கவசங்கள் இடைவெளியில் தாக்கியபடியே விரைந்த வீரர்களின் நஞ்சூட்டப்பட்ட அம்பால் கொல்லப்பட்டான் மகலன். உலகையே சுற்றி வந்த ஸ்பானியக் கப்பலும் நவீன ஆயுதங்கள் தாங்கிய படையும் வெறும் மூங்கில் கம்புகளுக்கும் ஈட்டிகளுக்கும் மண்ணைக் கவ்வின. மக்டான் தற்போது செபு என அழைக்கப்படும் பிலிப்பைன்ஸின் ஒரு மாகாணமாகும். கூர்ந்து அவதானிக்கும் திறன், தான் வாழும் சூழல் பற்றிய புரிதல், வீரம், தன் மண் மீதுள்ள பற்று, சிறந்த திட்டமிடல், வீரர்களின் ஒத்துழைப்பு போன்றவை லபுலபுவின் வெற்றிக்குக் காரணமாயின. இன்று பிலிப்பைன்ஸ் நாட்டின் முதலாவது தேசிய வீரராக லபுலபு கருதப்படுகிறார்.

சில நேரங்களில் சில பிரச்சினைகள் நமது சக்திக்கு மிகவும் பெரியதாக இருக்கலாம். அப்பிரச்சினையில் இருந்து தப்பி ஓடுவதே சிறந்த தீர்வாக கூடத் தெரியலாம். ஆனால் எதிர்காலத்துக்கு நாம் எடுக்கும் முடிவு சரியானதா என தூர நோக்குப் பார்வையுடன் அணுகி பலவேறு கோணங்களில் சிந்திக்கும் பொழுது அப்பிரச்சினை வெற்றி கொள்ளக் கூடியதாக மாறலாம். அறிவை, சிந்தனையை விசாலப்படுத்துவோம். இறந்த காலத்தின் அனுபவங்களை படிப்பினைகள் ஆக்கி, வளமான எதிர்காலத்தை நோக்கி, நிகழ்காலத்தை மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 59ஆவது நினைவுதினம் நேற்றாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



குமார்

# மனித சமுதாய மேம்பாட்டுக்கான ஒப்பற்ற பணியாளன் வீரசிங்கம்!




**கல்விக்கும், சமூக சேவைக்கும் கூட்டுறவு சேவைக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, மனித மேம்பாட்டுக்காக அயராது உழைத்த பெரியார்களில் கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கம் முதன்மையானவர். அவர், கூட்டுறவாளர்களால் கூட்டுறவுப் பெரியார் என்றும் கூட்டுறவுத் தந்தை என்றும் அன்பாக அழைக்கப்பட்டவர். அவருடைய காலத்தில் கூட்டுறவு என்றதொரு இயக்கம் கொடிகட்டிப் பறந்தது.**

மக்களின் கூட்டுறவு இயக்கத்துக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து கூட்டுறவை வளர்க்கப் பாடுபட்ட கூட்டுறவுப் பெரியார் போன்று தற்போது எவருமே இல்லை. இவ்வாறு பெரியாரின் சிறந்த கொள்கைப் பண்பு, அறிவு நேர்மை போன்றவையே இன்று கூட்டுறவு சிறப்பாக செயற்படுவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இலங்கையில் கூட்டுறவு அமைப்பையே உருவாக்க பெரும் சாதனை படைத்த அதிலே பெரும் வெற்றி கண்ட பெரியாரை பல உலக நாடுகளே பெரிதும் பாராட்டிப் பெருமை கண்டன.

குறிப்பாக ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, றொபேட் ஒவன், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர், அன்னைதிரேசா அம்மையார் போன்ற பல பேரறிஞர்கள் மட்டுமே செய்துகாட்டிய தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் புரிந்து மனித சமுதாயத்தின் ஈடேற்றத்துக்காக அரும்பெரும் பணிகளை ஆற்றினார் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம். இந்தப் பேரறிஞர்களை உலக மக்கள் இன்று தந்தை என்றும் அன்னை என்றும் உலக மூலகர்த்தாக்கள் என்றும் உலக முன்னோடிகள் என்றும் புகழ்ந்து ஆண்டு தோறும் அவர்களின் அளப்பரிய சேவைகளை மறக்காமல் நினைவு கூர்ந்து வருகின்றனர். அத்தகைய கௌரவத்துக்கும் மதிப்புக்கும் கூட்டுறவுப் பெரியாரும் தகுதியானவர் என்றால் அதில் இரண்டாம் கருத்து இல்லை. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பர். அதுதான் கூட்டுறவின் சாராம்சம். கூட்டுறவே நாட்டுயல்பு. அதுவே சமூகத்தின் வெற்றியுமாகும்.

# ஆயிரம் பிறைகண்ட மகானுக்கு 'யாழ் விருது'

பிரம்மஸ்ரீ இ.குமாரசாமிசர்மா,
ஓய்வுநிலை திட்டப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்

சிவஸ்ரீ தா.மஹாதேவ சிவாச்சாரியார் அறுபது ஆண்டுகளுக்கு மேலான அயராத குருகுல சேவைகளை ஆற்றியமையைப் பாராட்டி இந்த ஆண்டு 'யாழ். விருது' எனும் மதிப்புயர் விருது யாழ். மாநகரசபையினரால் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சிவஸ்ரீ மஹாதேவ சிவாச்சாரியார் இணுவில் வட்டுவினி இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் தர்மசாஸ்தா குருகுலம், காயத்திரி பீடம் என்பன அமைத்து வேத ஆகம சம்ரக்ஷணம் இந்துக் குருமார்களுக்குச் செய்து வந்தார். அவர் வாழ்ந்த குருகுலத்தில் வேதமந்திரங்கள் எந்த நேரமும் ஒலித்தவாறு இருக்கும். அந்தணச் சிறார்களின் வேதாத்யனம் காலை, மாலை என இரு வேளைகளிலும் ஒலித்தவண்ணம் இருந்தன. மந்திர உச்சாடனத்துடன் வேதசிவாகம வகுப்புகள் மஹாதேவ வாத்தியாரும் அவரது பிள்ளைகளும் நடத்திக் கொண்டிருந்தனர். குருகுலம் வாயிலாக சிவாச்சார்ய பாரம்பரியத்தினை வைதிக மரபை வளம்பெறச் செய்தமை போற்றத்தக்கது.

குருகுல அதிபர் வாத்தியாரிடம் சிவாகம நுட்பங்களைக் கற்ற, பயிற்சி பெற்ற பலர் சிறந்த சிவாச்சார்யர்களாக இன்று இலங்கையின் பல பாகங்களிலும், கடல் கடந்து உலகின் பல்வேறு நாடுகளிலும் ஆலயப் பணிகள் குருத்துவப் பணிகள் முதலான தெய்வ காரியங்களைச் சிறப்புடன் செய்து வருகின்றனர்.

பலராலும் 'வாத்தியார்' என கூறப்படும் மகான் சிவாச்சாரிய பரம்பரைகளைப் புதிது புதிதாக உருவாக்கியமை, கற்றுத் தேர்ந்த சிவாச்சார்யர்கள் பலர் வெளிவர அரும்பாடுபட்டுள்ளார்.

மேலும் அவர் மஹோற்சவ நிகழ்வுகள், சிவாச்சாரிய அபிஷேகங்கள், விவாகங்கள், ஹோமங்கள் முதலான சகல வைபவங்கள், அத்தனையும் சிறப்புற நடத்தி வைக்கின்ற பெருமைகளைக் கண்டுள்ளோம்.

ஆலய அமைப்புகள், வைதிக கிரியைகள், ஆகம கிரியைகள் தொடர்பான நெறிமுறைகள் என்பன பற்றி விரிவான விளக்கங்கள், சந்தேகங்களுக்கு தீர்வுகள், ஆலோசனைகள் என்பனவற்றை வெகு நுட்பமாக அறிந்து ஆற்றுப்படுத்திய தன்மைகள் யாவும் போற்றத்தக்கன. சமய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் கருத்தரங்குகள், கௌரவிப்புகள், பாராட்டு நிகழ்வுகள், பல ஆய்வரங்குக் கட்டுரைகள் என்பனவற்றில் பங்குகொண்டு ஆலோசனைகள் வழங்கி ஊக்கம் கொடுத்துள்ளார்.

இன்றைய நிலையில் வாத்தியார் உடல்நலம் சிறிது இயலாத நிலையில் பொது வைபவங்களில் பங்கு கொள்வதனைச் சிறிது தவிர்த்து வாழ்ந்து வருகின்றார். அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தன் சீரிய பணியை தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்பதே பலரதும் வேணவாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில்
அதிபராக கடமையாற்றி இன்று
(06.12.2023) புதன்கிழமை அகவை
அறுபதில் ஓய்வுபெறும்
எமது உடன் பிறப்பாகிய




திரு. ஐயம்பிள்ளை கேசவன்
(அதிபர்)

அவர்கள் ஓய்வு காலத்தில்
உடல் நலமும், மன நலமும்
பெற்று நீடூழி வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உடன் பிறப்புக்கள்
சகோதரர்கள், சகோதரிகள்.

(es53009) (N.I)


## மீள்கேள்வி அறிவித்தல் - 2024
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 2023.12.19 மதியம் 12.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2023.12.20 மு.ப.10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 2023.12.20 மு.ப.10.30
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், மானிப்பாய்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 18,000.00 | 1,714,370.00 | 600.00 |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 800.00 | 78,375.00 | 600.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 1 | காக்கைதீவு மீன்சந்தை (மேற்கு பகுதி புதிய கட்டடம்) (வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 8,300.00 | 830,000.00 | - |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 2,000.00 | 184,585.00 | - |
| 3 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 289,750.00 | - |
| 4 | மானிப்பாய்சிறுவர்பூங்காசிற்றுண்டிச்சாலை (தற்காலிகம்) | 1,000.00 | 2,500.00 | 240,350.00 | - |
| பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | | |
| 1 | பண்டத்தரிப்பு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 100.00 | 9,310.00 | - |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | | |
| 1 | மாகியபிட்டி பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 324,995.00 | - |
| 2 | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 2,200.00 | 212,420.00 | - |
| 3 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 313,500.00 | - |
| 4 | இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 280,915.00 | 1000.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2023.12.06 ஆம் திகதிய உதயன் பத்திரிகையிலும் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
திகதி: 06.12.2023

## வவுனியா வடக்கு பிரதேசசபை
## 2024.01.01 முதல் 2024.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2024

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2023.12.06 தொடக்கம் 2023.12.15 ஆம் திகதி பி.ப 1.50 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2023.12.15 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2023.12.15 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | சந்தை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 10,000.00 | 600,000.00 |
| 2 | நெடுங்கேணி ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 200,000.00 |
| 3 | கனகராயன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 200,000.00 |
| 4 | நெடுங்கேணி மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 300,000.00 |
| 5 | கனகராயன்குளம் மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 250,000.00 |
| 6 | நயினாமடு மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 50,000.00 |

- 5.11.2023 ஆம் திகதிய கேள்வி அறிவித்தலில் உள்ள கேள்வி நிபந்தனைகள் இவ் மீள்கேள்வி அறிவித்தலுக்கும் பொருந்தும் என்பதனைக் கருத்திற் கொள்ளவும்.
- விண்ணப்பப் படிவங்களை 2023.12.06 தொடக்கம் 2023.12.14 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் 2023.12.15 ஆம் திகதி அன்று பிற்பகல் 1.50 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது 024-2030200 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சோதிநாயகி மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.

(N.I)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை சப்பரத் திருவிழாவும், 14ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி-66)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 . 09 . 1939



உதிர்வு
18 . 11 . 2022

அமரர் திருமதி
**திலகமணி தவமணிநாயகம்**
(திதி: கார்த்திகை மாத தசமி)

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



உ



யாழ்ப்பாணம் வண்ணை
ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்

## வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்
பரிவாரத் திருக்கோவில்

# வேம்படிப் பிள்ளையார் கோவில்

புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**கரும ஆரம்பம்**
கார்த்திகை 21 ஆம் நாள் (07.12.2023) வியாழக்கிழமை
காலை 7.55 மணிமுதல் 9.10 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளை
**யாக ஆரம்பம் காலை 5.00மணி**

**எண்ணெய்க்காப்பு** 08.12.2023 வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் 09.12.2023 சனிக்கிழமை
நண்பகல் 12.00 மணிவரை

**மகா கும்பாபிஷேகம்** கார்த்திகை 24ஆம் நாள் 10.12.2023
ஞாயிற்றுக்கிழமை காலை 7.10 மணிமுதல் 8.20 மணிவரையுள்ள
சுபமுகூர்த்தவேளையில் இடம்பெறும்.

**மகா கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு**
சிவாகம ஞான சாகரம் ஈசான சிவாச்சாரியார்
**சிவப்பிரம்மஸ்ரீ**
**சொ.இ.விக்கினேஸ்வரக் குருக்கள்**
(பிரதமகுரு, வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்
திரு.க. வைத்திலிங்கம் செட்டியார்
பரம்பரை தர்மகர்த்தாவும், உரிமையாளரும்,
முகாமையாளரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1941

மறைவு 04 . 12 . 2023



## செல்லையா சரஸ்வதி

நாகர் கோவில் தெற்கு, நாகர் கோவிலைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சரஸ்வதி அவர்கள் கடந்த (04.12.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சீதேவன் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னர் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், கலைமதி, பவானி, திருப்பதி, மங்கயத்திலகம் (லண்டன்), சுரேஸ்வரன் (ஜேர்மனி), சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராஜா, நடராசா, சாந்தினி, சிவஞானசுந்தரம், குமாரகுலசிங்கம், பர்மீனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பாக்கியம், மயில்வாகனம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், நளினி, நவீனன், கீத்தனன், பிராத்தனன், பவித்திரன், சங்கவி, சர்மிலன், மதுசா, சதுர்ஜன், தர்சிகன், கோபிகா, சுகன்ஜா, டிலக்ஷன், யதீசன், டினுசன், மிதுசன், கபிஷா, கியானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சுஸ்மி, சிறிஷா, டனீஷ், அயானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வதிரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திருப்பதி(மகன்)- 077 539 1280**
**குமார்(மருமகன்)- 076 719 9036**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 27289) S-1

# காணவில்லை



**சோமசுந்தரம் உதயகுமார் (ராஜன்)**

என்பவரை 20.11.2023 இல் இருந்து காணவில்லை (மன நலம் பாதிக்கப்பட்டவர்) எங்கிருந்தாலும் தெரிந்தவர்கள் இந்த தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்

**077 087 2182, 077 479 8382**

## இலங்கைக்கு சீனாவால் விமானங்கள்

கொழும்பு, டிசெ. 6

சீனாஇரட்டை இயந்திரம் பொருத்தப்பட்ட இரண்டு விமானங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இந்த விமானங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இரத்மலானை விமான நிலையத்தில் இடம் பெற்றது. (ம-6)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 05.09.1933 இறப்பு 04.12.2023

எமது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும் வளர்மதியின் வளர்ச்சிக்கு பாரியளவில் நிதிப் பங்களிப்பை வழங்கியவரும் நந்தாவில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவருமாகிய **திரு.மஹாராஜா ரங்கராஜா (U/K)** அவர்களின் தாயார்

## மகேஸ்வரி மஹாராஜா

**(கனடா-மொன்றியல்)**

அவர்கள் 04.12.2023 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரிற்கு எமது இறுதி அஞ்சலியை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது வளர்மதி சமூகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CS 28290) A-1

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**

**சம்பியன் லேன், கொக்குவில்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1946

மறைவு 05 . 12 . 2023



## திருமதி சற்குணம் தவமணி

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணம் தவமணி அவர்கள் நேற்று (05.12.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி தங்கம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பு சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பு சற்குணம் (ஓய்வுபெற்ற மருந்து கலவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குருநாதர், சீதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், சாந்திலிங்கம் சிவராசா, செல்வராசா, நற்குணராணி, மனோகரன், செல்வராணி, துரைராசா, மார்க்கண்டு மற்றும் லில்லி கிறேற் ஆகியோரின் மைத்துனியும், உதயரஜனி (பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), கமலரஜனி (உதவிக் கணக்காய்வு அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), நிர்மலன், நர்மஜன் (கால்நடை வைத்திய அதிகாரி- சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜசிங்கம் (பொறியியலாளர்), ஜெயக்காந்தன் (மின்னியலாளர், யாழ். மாநகர சபை), சிந்துஜா (பொறியியலாயர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானி (மருத்துவ பீடம், நான்காம் வருட மாணவி), நிரோசன் (பொறியியல் பீட 2ம் வருட மாணவன்), கௌசிகன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), கஜன் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்), சிவானுஜன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன்), குகபாலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2023) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இல.225, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொ.பே.இல.:077 990 5836**

(CS 27293) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு 27 - 01 - 1950

உதிர்வு 04 - 12 - 2023



## சின்னையா நடராஜா (நாகராசா)

**(அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், ஆனந்தபுரம், கிளிநொச்சி மற்றும் டச்சு வீதி, சாவகச்சேரி)**

மீசாலையை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராஜா (04.12.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், நிமலன் (UK), குமணன் (UK), ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்பலம் - சரஸ்வதி, சிவபாக்கியம் - யோகசுந்தரம், பரமேஸ்வரி - சுப்பிரமணியம்,இரத்தின பூபதி - சற்குணநாதன் ஆகியோரின் சகோதரனும், ராதா (ராஜி, UK), மிராளினி (மீரா, UK) ஆகியோரின் மாமனாரும், ஷாய்ரா (UK), விக்னாஷ் (UK), ஜலக்ஷா (UK), அஸ்மிகா ((UK), ஹரினிஷ் (UK) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சு வீதி, சாவகச்சேரி.**
**076 790 0640,**
**077 354 5213**

(CS 53083)(AK-1)

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித உரிமைகளின் பெயரால்

# ஆசிரியர்களுக்கு அச்சமூட்டுகிறோம்

## மைத்திரி நாடாளுமன்றில் கவலை

கொழும்பு, டிசெ. 6
மனித உரிமைகள் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்களைத் தண்டிக்க முடியாத நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால், வரும் காலத்தில் கீழ்த்தரமான மாணவ சமூகம் உருவாகும் என்று முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த காலங்களில் ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு இருந்த மதிப்பு மற்றும் கௌரவம் தற்போது இல்லை. சிறந்த தலைமுறைகளை உருவாக்க ஆசிரியர்கள் முயற்சித்தாலும் அதற்குப் பல தடைகள் தற்போது காணப்படுகின்றன. ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலான உறவு நிலை தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மாணவர்களைத் தண்டிக்க முடியாத நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். மாணவர்களைத் தண்டித்தால் அவர்களின் பெற்றோர் மனித உரிமை என்று குறிப்பிட்டுக் கொண்டு பொலிஸில் முறைப்பாடளிக்கிறார்கள். அதன் பின்னர் ஆசிரியர் தண்டிக்கப்படுகிறார். ஆசிரியர்கள் மீதான மாணவர்களின் மதிப்பு மற்றும் கௌரவம் தற்போது முழுமையாக இல்லாதொழிந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு சிறந்த எதிர்கால தலைமுறையை எதிர்பார்க்கமுடியும்?- என்றார். (அ-ம)

### மாவீரரை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்துக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமது குடும்பத்தில் உயிரிழந்த ஒருவரை அவரது குடும்ப உறுப்பினர்கள் நினைவுகூர உரிமையுண்டு. நானும் எனது தந்தையின் கல்லறைக்குச் செல்வேன். ஆனால், வேறு ஒரு நபரின் பிறந்த நாளன்று தந்தையினதோ அல்லது தம்பியினதோ கல்லறைக்குச்செல்வதில்லை. எனது கட்சிக் கொடியை எடுத்துக்கொண்டு கல்லறைக்குச் செல்வதும் இல்லை. பிரபாகரனின் பிறந்தநாளுக்கு கொடியுடன் செல்வது குடும்ப உறுப்பினரை நினைவுகூர அல்லவே...? இது பயங்கரவாதத்துடன் தொடர்புபடவில்லை, பயங்கரவாத கருத்தியலுடன் சம்பந்தப்படவில்லை எனக் கூறமுடியாது.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாம் தவறாகப் பயன்படுத்தவில்லை. கைதானவர்கள் 48 மணிநேரத்துக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்றம் ஊடாகவே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இப்படியான நிகழ்வுகளை நடத்துவதால்தான் பிரச்சினை. அவ்வாறான நிகழ்வுகளை நடத்தவேண்டாம் எனச் சொல்லுங்கள். அவ்வாறு நடத்தினால் பொலிஸார் கைது செய்வார்கள். அதனை நிறுத்த முடியாது. சட்டம் செயற்படுத்தப்படும்' - என்றார்.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதிலளித்துக்கொண்டிருக்கையில், அவருக்கும் சாணக்கியன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கிடையில் கடும் சொற்போர் மூண்டது. கஜேந்திரகுமார் எம்.பி. இடையில் சபையில் இருந்து சென்றுவிட்டார். (அ-ம-44)

### பயங்கரவாத...

இலங்கையில் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால், அங்குள்ள நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படும் என்றவாறாக பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிட்டுள்ளது பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகம்.
பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதற்கு முன்னதாக பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு, பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் இவ்வாறு அறிக்கையிட்டுள்ளது என்று பி.பி.சி. ஊடகத்தின் முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தனது ருவிற்றரில் தெரிவித்துள்ளார். (அ-ம)

### அநாமதேய...

திகதி வியாழக்கிழமை போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும், கிளிநொச்சி வளாக சிங்கள - தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கடந்த மாதம் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றமை தொடர்பாக, பொறியியல் பீட சிங்கள - தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பலருக்கு அநாமதேய மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டிருந்தன.
அதன் தொடர்ச்சியாக 7ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி, அறிவியல் நகரில் ஏ-9 வீதியை மறித்துப் போராட்டமும், பேரணியும் நடத்தப்படவுள்ளதாகவும், அதனைத் தவிர்ப்பதற்காக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பீடங்களின் பீடாதிபதிகள் பதவி விலக்கப்படுவதோடு, நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் போராட்ட முன்னறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.
இது தொடர்பிலேயே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்குக் கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.
அந்தக் கடிதத்தில், 'யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினராகிய நாங்கள் Jaffna Engineering2023s_protonmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பலருக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அறிகின்றோம். யாழ்ப்பா [illegible] ணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களுக்கென ஒரேயொரு மாணவர் அமைப்பாக எமது அமைப்பே இயங்கி வருகிறது. எமது பீட மாணவர்களுக்கென வேறெந்த அமைப்பும் கிடையாது. அத்துடன் எதிர்வரும் 7ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள போராட்டங்களுக்கும் எமக்கும் எவ்விதமான தொடர்புகளும் கிடையாது என்பதோடு, எமது மாணவர்கள் எந்தப் போராட்டத்திலும் கலந்துகொள்ளமாட்டார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-27)

### ஹெலியில்...

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஹெலியொன்றை வாடகைக்கு அமர்த்தி நெடுந்தீவுக்குச் சென்று திரும்பியுள்ளனர்.
நெடுந்தீவில் செயற்பட்டு வரும் தனியார் சுற்றுலாத்துறை நிறுவனமொன்றின் ஏற்பாட்டில் குறித்த சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவுக்கு உலங்கு வானூர்தியில் சென்றுள்ளனர். இது தீவக சுற்றுலாத் துறையில் ஒரு திருப்புமுனையான சம்பவம் என்று கருதப்படுகின்றது. (அ-ம-66)

### பிறப்புவீதம்..

யானதும் பாடசாலைக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 92 ஆயிரமாக காணப்படுகின்றது. 10 வருடங்களுக்கு முன்னர் இந்த எண்ணிக்கை 3 இலட்சத்து 40 ஆயிரமாக காணப்பட்டது என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ச-44)

### கல்வியியற்றுறைக்கு...

மன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடம் இன்னும் உருவாக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் என்பது வடக்கு - கிழக்கில் இருக்கின்ற எல்லா பல்கலைக்கழகங்களுடன் சேர்ந்த ஒரு முதல் பல்கலைக்கழகமாகும். அங்குள்ள கல்வியியலாளர்களை முகாமைத்துவ ரீதியாகவும், வாண்மை விருத்தி ரீதியாகவும் வளர்த்தெடுப்பதற்கு கல்வியியல் பீடம் மிகவும் முக்கியமானது. கல்வியியற்றுறையின் செயற்பாடு சிறப் [illegible] பாக உள்ளது. ஆனால் அது ஒரு துறையாகவே இருக்கின்றது. அதனை பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக மாற்ற வேண்டும். யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறை பீடமாக மாற்றப்பட்டால்தான் கல்வித்துறையில் மாற்றங்கள் வரும்' - என்றார். (அ-ம-44)

### பயங்கரவாதத்...

மதுர விதானகே வலியுறுத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபைஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சிலர் 'கோட்சூட்' அணிந்துகொண்டு பயங்கரவாதத்துக்கு வெள்ளையடிக்க முற்படுவது கவலையளிக்கின்றது. டொலர்களுக்காகவே அவர்கள் இவ்வாறு கதைக்கின்றனர். பயங்கரவாதம் என்றால் பயங்கரவாதம்தான். அதனை இனரீதியாக வகைப்படுத்தமுடியாது. 9/11 தாக்குதலின் பின்னர் பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்காவில் கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. எனவே, இணையவழி ஊடான பயங்கரவாத நடவடிக்கை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் நவீன பயங்கரவாதம் தொடர்பிலும் பாதுகாப்புத் தரப்பு விழிப்பாகவே இருக்கவேண்டும். அதற்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படவேண்டும்' - என்றார். (அ-ம-44)

### புலமைப்பரிசில்...

வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று இலங்கையிலும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இல்லாதொழிக்கப்படவேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் தரம் 8 வரை தவணைப்பரீட்சை நடத்தப்படுவது இல்லை. ஆனால், இலங்கையில்தான் முதலாம் தரத்திலிருந்து பரீட்சைகளை நடத்தி மாணவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றனர். புலமைப்பரிசில் பரீட்சை என்ற பெயரில் மாணவர்களைத் துன்புறுத்துகின்றார்கள். பெற்றோர் இவ்வாறான துன்புறுத்தல்களையும் நெருக்கடிகளையும் செய்கின்றனர். இதனால் மாணவர்கள் கடுமையான உளப்பாதிப்புக்கு உட்படுகின்றனர் - என்றார். (அ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைச் சீரழிக்கும் ரணிலின் திட்டங்கள்

## சஜித் குற்றச்சாட்டு



**கொழும்பு, டிசெ.6**

**நாடு முழுவதும் ஊழல், மோசடி, திருட்டு, வீண் விரயம் நடைபெறுகின்றது என்றும், ஊழல் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் வங்குரோத்து நாட்டைக்கூடச் சீரழிக்கும் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிழலில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

சில தலைவர்கள் கூட்டங்களுக்கு வந்து ஊழல் பேரங்கள் பற்றி முறையிட்டு, ஆட்சிக்கு வந்ததும் தண்டிப்போம் என்று கூறினர், ஆனால் எதிர்க்கட்சியில் இருந்து வந்த ஐக்கிய மக்கள் சக்தி இந்த நாட்டை வங்குரோத்து செய்த ராஜபக்ச குடும்பத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்தது. நாட்டை திவாலாக்கி அடிப்படை உரிமைகளை மீறியதாகத் தீர்ப்புப் பெறப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கூட்டம்

மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் அண்மையில் நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பாடசாலை இடைவிலகல் மற்றும் மீளிணைப்புச் செயற்பாடு, சிறுவர் துஷ்பிரயோகம், பெற்றோரை இழந்த சிறுவர்களின் விபரங்கள் மற்றும் அவர்களுக்கான தேவைகள், பிரச்சினைகள், பிரதேச மட்டத்தில் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள், சிறுவர் கழகங்களின் செயற்பாடுகள், கிராம மட்டச் சிறுவர் கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாடுகள், சிறுவர்களுக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக்கொடுத்தல், சிறுவர் தொடர்பான பிரதேச மட்டச் செயற்பாடுகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டன. (ரி-66)



## ரணிலுக்கு ஆதரவு; தீர்மானம் இல்லை

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 6

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையே தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவு. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதா? இல்லையா? என்பதை கட்சிதான் தீர்மானிக்கும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு பலத்த கேள்வியுள்ளது. நாட்டுக்கு பொருத்தமான, பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வெற்றி வேட்பாளர் களமிறக்கப்படுவார். அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு பெரமுனக் கட்சி தயார்- என்றார். (ச-44)

## தொல்லியல் பொருள்கள் பொதுமக்கள் பார்வைக்கு

கொழும்பு, டிசெ. 6

ஒல்லாந்து காலனித்துவக் காலத்தில் இலங்கையிலிருந்து நெதர்லாந்துக்கு கொண்டுச் செல்லப்பட்டு தற்போது மீளக் கையளிக்கப்பட்டிருக்கும் தொல்லியல் பொருள்கள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு புத்தசாசன மற்றும் சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் தேசிய அருங்காட்சியகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தும் விசேட நிகழ்வாக 6 தொல்லியல்பொருள்களும் உத்தியோகபூர்வமான இலங்கைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த தொல்லியல் பொருள்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ரி-44)



பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ரி-60)


### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நல்லூர் கோயிலிலிருந்து 600 M தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.

077 3068 993

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு நவரத்தினராஜா வீதியில் " ஏழரை " (நிலப்பரப்பு 7 1/2) விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0777 368 134

### காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் வீதி ஓரமாக ஆறுகால் மடத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (உறுதிக்காணி)

075 9444 601

### TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

புதிய பிரிவு ஆரம்பம்: A/L 2025

- பொறியியல் தொழில்நுட்பம்
- உயிர்முறைமை தொழில்நுட்பம்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், கணிதம், சித்திரம்

திகதி : 09.12.2023 சனிக்கிழமை

ஆரம்பநேரம்: 8.30 a.m

தொடர்புகளுக்கு: 077 017 5346

### மணமகள் தேவை

01. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அனுசம். Quantity Surveyor, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA (Hons), Accountant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
03. கோப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1984. சதயம். MBBS Doctor,Ireland Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
04. பளை. இந்து. கௌரவகுலம். (V). 1984. அவிட்டம். Phd, Divorce, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
05. வண்ணார்பண்ணை. இந்து. கௌரவகுலம். (V). 1976. ரேவதி . MBBS Doctor, Divorce UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
06. நீர்வேலி. இந்து. கௌரவகுலம். (V). 1989. சுவாதி. Phd in Chemistry, South Korea மணமகனுக்கு மணமகள் தேவை.
07. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V). 1987. ஆயிலியம். MBBS Doctor, மணமகனுக்கு மணமகள் தேவை.
08. யாழ். இந்து. கௌரவகுலம் (V). 1986. மகம். MSc, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
09. கோப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1988. பூரட்டாதி. MBA கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
10. மயிலிட்டி. இந்து. குருகுலம். 1981. அத்தம். Accountant, USA மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer  
Whatsapp - 077 803 8193  
Phone - 077 539 3728

### காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.

திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389,077 986 5457




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org